## மேட்டூர் சார்பு நீதிமன்றம்

| O.S. No. 227/2014 | Date : 12.01.2024 | DW3 |
|---|---|---|
| Name: சுவாமிநாதன் | S/o. **கருப்பா பிள்ளை** | |
| Evidence Recorded Time: 01.21 P.M. to 1.50 P.M | | |

**6, 7 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :-**

சாட்சி சொல்ல நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வந்ததா என்றால் இல்லை. என்னை காஞ்சனா என்பவர் சாட்சி சொல்ல அழைத்தார். பதிவு செய்யப்பட்ட உயில் குறித்து யார் சொல்லி தெரியும் என்றால் குமரேசன் சொல்லி தெரியும். எந்த வருடம், தேதி, மாதத்தில் சொன்னார் என்று தெரியுமா என்றால் 2002 அல்லது 2003 வாக்கில் சொன்னார். உயிலை யார் எழுதியது என்றால் துரைசாமி பிள்ளை எழுதினார். சர்வே எண், விஸ்தீரணம் தெரியுமா என்றால் சர்வே எண்.240/1, 235/1 மொத்தமாக 6 ஏக்கர் 95 செண்ட் நிலத்திற்கு உயில் எழுதிக்கொடுத்துள்ளார். உயில் எந்த தேதியில் எழுதப்பட்டது என்று தெரியுமா என்றால் தெரியாது. உயிலில் யார் சாட்சிகள் என்றால் தெரியாது. என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் குமரேசன் குத்தகைக்கு ஓட்டியதாக சொல்லியுள்ளேன் என்ன சர்வே எண்ணில் ஓட்டினார் என்றால் மேலே சொன்ன சர்வே எண்களில் உள்ள 6 ஏக்கர் 95 செண்ட் நிலத்தையும் ஓட்டினார். குமரேசன் எந்த தேதியில் இருந்து எந்த தேதி வரை குத்தகைக்கு ஓட்டினார் என்றால் தேதி குறிப்பிட்டு தெரியாது, 10, 20 வருடங்களாக ஓட்டினார். பிரமாண சாட்சிய வாக்குமூலத்தில் என் மனைவி ஒன்றி கவுன்சிலராக இருப்பதை சொல்லியுள்ளேன், அது எனது அரசியல் பலத்தை காட்டவேண்டும் என்பதற்காக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. துரைசாமி பிள்ளை இறந்த தேதி, மாதம், வருடம் தெரியுமா என்றால் நினைவில்லை. மேட்டூர் நீதிமன்றங்களில் எனக்கு எத்தனை வழக்குகள் உள்ளது என்றால் வழக்குகள் எதுவும் இல்லை. வழக்கு உள்ளது என்றாலும் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. ஜோதிலிங்கம் மற்றும் ராமநாதபிள்ளை இருவரும் உடன்பிறந்த சகோதர்களா என்றால் தெரியாது. ஜோதிலிங்கம் இறந்தவிட்டார் என்றாலும் அவர் மனைவிதான் இந்த வழக்கில் 6ம் பிரதிவாதி சம்பூரணம் என்றாலும், அவர்கள் மகள் தான் 7ம் பிரதிவாதி சூரியஜோதி என்றாலும் எனக்கு தெரியாது. ஜோதிலிங்கத்திற்கும்,

ராமநாதபிள்ளைக்கும் பாகப்பிரிவினை மூலம் ஒதுக்கப்பட்டு தனிப்பட்டா வழங்கப்பட்ட சொத்து தாவா சொத்தின் சர்வே எண்.240/1ஏ ல் ஒரு பகுதி என்றால் தெரியாது. ஜோதிலிங்கம் இறந்த பின்பு அவரது சகோதரர் ராமநாத பிள்ளை சர்வே எண்.240/1ஏ வில் தனிப்பட்ட சுவாதீனத்தில் இருக்கிறார் என்றால் இல்லை. நான் சொல்வது போல குமரேசன் எந்த காலத்திலும் குத்தகைக்கு ஓட்டவில்லை என்றாலும், நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

(8ம் பிரதிவாதி தரப்பில் மேற்கண்ட குறுக்கு விசாரணையை தனதாக ஏற்றுக்கொள்கிறார்)

**<u>வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை –</u>**

நான் குடியிருப்பது விருதாசம்பட்டி என்றால் சரிதான். வழக்கு சொத்து மாதநாய்க்கன் பட்டியில் உள்ளது என்றால் சரிதான். மேற்படி இரண்டு ஊர்களுக்கும் எவ்வளவு தூரம் என்றால் 3 கி.மீ இருக்கும். குமரேசனை எத்தனை ஆண்டுகளாக தெரியும் என்றால் 1990–ம் ஆண்டு முதல் தெரியும். குமரேசன் குட்டப்பட்டி பஞ்சாயத்தில் கிளார்க்காக பணிபுரிந்தார் என்றால் சரிதான். குமரேசன் ஒரு வகையில் எனக்கு தூரத்து உறவினர் என்றால் இல்லை. வாதிகள் பிரதிவாதிகளை தெரியும் என்று கூறியுள்ளேன் வாதிகள் யார், பிரதிவதிகள் யார் என்றால் வாதிகள் ராமாயி, ஜானகி, பர்வதம், பாக்கியம், லட்சுமி, விமலா, பிரதிவாதிகள் காஞ்சனா, பார்த்தசாரதி, பார்வதி, முருகேசன், சம்பூரணம் ஆவார்கள். இன்று நீதிமன்றத்திற்கு வந்தவர்கள் பெயர்களை சொல்ல முடியுமா என்றால் காஞ்சனா பெயர் தெரியும், மற்ற இருவரான 15–ம் வாதி, 8ம் பிரதிவாதி பெயர் தெரியாது. துரைசாமி பிள்ளைக்கு எத்தனை பெண் மக்கள் என்றால் 7 பேர் ஆவார்கள். அதில் எத்தனை பேர் இறந்துவிட்டார்கள் என்றால் இரண்டு பேர் இறந்துவிட்டார்கள். எத்தனை அயிட்ட சொத்திற்கு உயில் எழுதி வைத்தார் என்றால் அனைத்து சொத்திற்கும் எழுதி வைத்தார், எத்தனை அயிட்டமாக எழுதி வைத்தார் என்று தெரியாது. வழக்கு சொத்திற்கு மட்டும் உயில் எழுதினாரா அல்லது வேறு சொத்துக்களுக்கும் சேர்த்து எழுதினாரா என்றால் காட்டு சொத்திற்கு எழுதி வைத்தார். உயிலை படித்து பார்த்துள்ளேன், நினைவில்லை. எத்தனை வருடங்களுக்கு முன்பு படித்து பார்த்தேன் என்றால் 2003–ம் ஆண்டு வாக்கில் படித்து பார்த்தேன். குமரேசன் குத்தைக்கு ஓட்டி வந்ததாக சொல்லியுள்ளேன், எதன்

அடிப்படையில் குத்தைக்கு ஓட்டி வந்தார் என்றால் வாய்மொழியாக குத்தைக் கலூட்டி வந்தார். எந்த ஆண்டு முதன் முதலில் குத்தைக்கு பேசப்பட்டது என்றால் தெரியாது. விளைச்சலில் என்ன விகிதாசாரம் குத்தைக்கு கொடுத்தார் என்றால் விளைச்சலுக்கு ஏற்ப கொடுப்பதால் விகிதாசாரம் எனக்கு தெரியாது. நான் சொன்ன நிலத்தில் எத்தனை கிணறுகள், மின் இணைப்புகள், ஆழ்துளை கிணறுகள் உள்ளது என்றால் ஒரு கிணறு உள்ளது, ஆழ்துளை கிணறு இல்லை. குமரேசனோ, அவரது குடும்பாத்தார்களோ சொத்தில் தார்சு வீடு எதுவும் காட்டவில்லை என்றால் சரிதான். துரைசாமி பிள்ளையால் கட்டப்பட்ட சீமை ஓட்டு வீடு மட்டும் அந்த நிலத்தில் உள்ளது என்றால் சரிதான். குமரேசனும், அவரது குடும்பத்தாரும் சொந்த செலவில் மேம்பாடு செய்யததாக சொல்லியுள்ளேன் அவ்வாறு என்ன செலவு செய்தார் என்றால் மண்ணை சமன்படுத்தி, கிணற்றை தூர்வாரியுள்ளார், அதே போன்று அரசாங்கம் நிலத்தை குடியிருப்பு கட்டுவதற்காக கையகப்படுத்துவதை தடுத்துள்ளார். மேம்பாடு செய்தற்கான கணக்குகளை சரிசெய்யவேண்டும் என்று கேட்டார் என்று சொல்லியுள்ளேன் குமரேசன் யாரிடம் எப்போது கேட்டார் என்றால் பஞ்சாயத்து பேசப்படும் போது அனைவரிடமும் கேட்டார். பஞ்சாயத்து எப்போது பேசப்பட்டது என்றால் 2000-ம் ஆண்டு வாக்கில் பேசப்பட்டது. நான் சொல்வது போல வாதி, பிரதிவாதிகளை எனக்கு தெரியாது என்றாலும், குமரேசன் பஞ்சாயத்து கிளார்க் என்பதால் அவர்கள் குடும்பத்தார் கேட்டுக்கொண்டதன் பேரில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை - இல்லை.</u>

ஓம்/-DW3,

இதில் கண்ட சங்கதிகள் என் முன்னிலையில் சாட்சியிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் /கைரேகை செய்தார்.

ஓம்/-S.முத்துராமன்,
சார்பு நீதிபதி, மேட்டூர்.